# பெற்றோருக்கான பாலர்பாடசாலை குறித்த தகவல்கள்

அன்பான பெற்றோர்களுக்கு

உங்கள் குழந்தை இக் கோடை காலத்தில் பாலர் பாடசாலையில் சேர்க்கப்படுகிறது. அத்துடன் உங்கள் குழந்தைக்கு ஒரு புதிய வாழ்க்கைக் கட்டம் ஆரம்பிக்கிறது. இக் குறிப்பேடு பாடசாலையில் முதல் இரு வருடங்களுக்கான சில தகவல்களை வழங்குகிறது. இதன் மூலம் நீங்களும் உங்கள் குழந்தையும் எதிர் நோக்க வேண்டிய விடயங்கள் பற்றிய ஒரு உருவகத்தைப் பெறலாம். பாடசாலையில் உங்கள் குழந்தைக்கு ஒரு நல்ல ஆரம்பத்திற்கு வாழ்த்துகிறோம்.

Bildungsdepartement des Kantons St. Gallen
Amt fuer Volksschule
2008

**பாலர்பாடசாலையின் பணிகள்**
பாலர்பாடசாலை குழந்தைகளின் மன, சமூக மற்றும் உடல் ரீதியான முன்னேற்றத்தை வளர்க்க உதவுகிறது. கதைகள் கேட்பது, பாடல்கள் பாடுவது, செய்யுள் கற்பது மற்றும் அவர்கள் பல்வேறுபட்ட பாத்திரங்களில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளின் மூலம் பல்வேறு அனுபவங்களைச் சேகரித்துக் கொள்கிறார்கள். அவர்கள் விளையாடுதல், ஆடுதல், உருவங்களை அமைத்தல், வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள். இப் பல்வேறுபட்ட ஆற்றல்களால் உடல் இயக்கங்கள், ஒன்றை உருவாக்கும் ஆற்றல், உள்வாங்கும் தன்மை, கணித ரீதியான எண்ணாற்றல். கற்பனை வளம் மற்றும் மொழி விருத்தி அடைகிறது. உங்கள் குழந்தை அவர்களின் சிந்தனைகளை சொல்லில் வெளிப்படுத்துவதற்கும், ஒரு பெரிய சமூகத்தில் தன்னை இணைத்துக் கொள்வதற்கும், கேள்விகளைக் கேட்பதற்கும் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டறிந்து கொள்வதற்கும் கற்றுக் கொள்கிறார்கள்.

பாலர் பாடசாலையில் விளையாட்டு ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறது. ஒரு பெரிய கூட்டத்தில் விளையாடுதல் மற்றும் விசேட பயிற்சி முறையில் அமைக்கப்பட்ட விளையாட்டுச் சூழலினால், வீட்டில் விளையாடுவது அல்லது ஒரு விளையாட்டுத் திடலில் விளையாடுவது போன்ற செயற்பாடுகள் முழுமைப்படுத்தப் படுகிறது.

பாலர்பாடசாலையின் இரு வருட காலங்களில் விளையாடும் நிலையிலிருந்து விளையாட்டின் மூலம் கற்றல் என்ற நிலையை அடைகிறார்கள். வகுப்பில் அளவற்ற அனுபவங்கள் மற்றும் குறிக்கோளுடனான கற்றல் ஆகிய செயற்பாடுகள் மூலமாக குழந்தைகள் முதலாம் வகுப்பிற்குத் தயார் செய்யப் படுகிறார்கள்.

**சுகாதார நடவடிக்கைகள்**
பாலர் பாடசாலை ஆசிரியர் பாட நேரத்தில் பற்களைப் பராமரிப்பது மற்றும் உணவுப் பழக்கங்களையும் போதிப்பார்.

இரு வருட பாலர் பாடசலை ஆண்டுகளில் ஒரு தடவை கட்டாயமான மருத்துவப் பரிசோதனை இடம் பெறும். அதற்கான செலவு பாடசாலையினால் ஏற்றுக் கொள்ளப்படும். இது பற்றி சரியான நேரத்துக்கு பெற்றோர்களுக்கு அறியத்தரப்படும்.

ஒவ்வொரு வருடமும் பாடசாலை பல்வைத்தியரினால் பற்கள் பரிசோதிக்கப்படும். இவ் வருடாந்த பரிசோதனைச் செலவையும் பாடசாலையே ஏற்றுக் கொள்ளும். சிகிச்சைக்கான செலவு பெற்றோரின் பொறுப்பாகும்.

**வீதி விதிமுறைகள்**
ஒரு ஆண் அல்லது பெண் காவலர் குழந்தைகளுக்கு சரியான வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்கப் பயிற்சி அளிப்பதோடு சாலைப் போக்குவரத்தில் சவாலான சந்தர்ப்பங்கள், முக்கியமாக பாடசாலைக்குச் செல்லும் வழி பற்றியும் விளக்கிக் கூறுவார்.

**அடிப்படைச் சங்கீத பாடசாலை**
அநேகமான பாடசாலைகளில் பாலர் பாடசாலையின் இரண்டாவது ஆண்டின் கால அட்டவணையில் அடிப்படைச் சங்கீத பாடசாலை ஒரு அங்கம் வகிக்கிறது. அவர்கள் ஒரு

உயிர்ப்பான, பல்வேறுபட்ட, வித்தியாசமான இன்னிசை, தாளலயம் மற்றும் இசைக் கருவிகளின் ஒலிப் பண்புகள் ஆகியவற்றை அறிந்துக் கொள்கிறார்கள். கேட்டல், பாடுதல், ஆடுதல் மற்றும் இசைத்தல் மூலம் குழந்தைகள் சங்கீதத்தை அனுபவித்து அறிந்துக் கொள்வதோடு, பிற்பாடு ஒரு சங்கீத வாத்தியத்தினைக் கற்றுக்கொள்ளுவதற்கான அடிப்படை அறிவையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

**புலம்பெயர்ந்த பின்னணியிலுள்ள குழந்தைகளுக்கு ஜேர்மன் மொழி**
ஜேர்மன் மொழி அறிவு குறைவாக உள்ள குழந்தைகளுக்கு பாடசாலை ஜேர்மன் வகுப்புக்களை அளிக்கிறது. ஜேர்மன் மொழியில் வாய் மொழி அறிவைப் பயிற்றுவதன் மூலம் வகுப்பில் தினசரி விடயங்களை இலகுவாகப் புரிந்து கொள்வதற்கு வழி வகுத்துக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

**ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**
பாலர் பாடசாலை ஆசிரியர் அல்லது பெற்றோர் குழந்தைக்குச் சிரமம் இருப்பதை உணரும் பட்சத்தில் விசேட ஊக்கம் அளிக்கப்படும். பெற்றோர்களின் அனுமதியோடு ஒரு தேர்ந்த நிபுணரின் மூலம் பரீட்சிக்கப்படும்.

**பாலர் பாடசாலை மற்றும் பெற்றோரின் ஒருங்கிணைந்த செயற்பாடு**
பாலர் பாடசாலை ஆசிரியரும் பெற்றோரும் சேர்ந்து செயற்படுகிறார்கள். ஒரு ஆரோக்கியமான இணைந்த செயற்பாடு குழந்தையின் முன்னேற்றத்தில் ஒரு அனுகூலமான விளைவை உண்டாக்குகிறது.

உதாரணமாக தனிப்பட்ட முறையிலான கலந்துரையாடல் அல்லது பெற்றோருக்கான கூட்டத்தின் மூலம் பெற்றோர் தொடர்பு கொள்ள முடியும். தனிப்பட்ட கலந்துரையாடலில் குழந்தையின் பொது முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிப் பேசப்படும். வழக்கப்படி பெற்றோர்களுக்குஆசிரியர்களிடமிருந்து ஒரு அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்படும். பெற்றோர்கள் கலந்துரையாடலை விரும்பும் பட்சத்தில் அல்லது கேள்விகள் இருக்கும் பட்சத்தில் எச்சமயத்திலும் பாலர் பாடசாலை ஆசிரியரை அணுகலாம். பெற்றோர்கள் அவர்கள் குழந்தையின் வகுப்பிற்கு வருகை தரலாம்.

**விதிமுறைகள்**
**பாடசாலை மக்கள் பாடசாலையின் அங்கமாகும்**
ஆகஸ்ட் மாதம் 1ம் திகதியில் உங்கள் குழந்தை நான்கு வயது பூர்த்தியடைந்திருக்கும் பட்சத்தில் பள்ளிக்குச் செல்லக் கடமைப் பட்டிருப்பதோடு பாலர் பாடசாலையின் முதல் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

பாலர் பாடசாலையில் கற்றலை ஒத்திப் போடுதல் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே அனுமதிக்கப்படும். பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலை ஆலோசனை மையம் அது குறித்து முடிவெடுக்கிறது. விதிப்படி ஒரு பாடசாலையின் மனோதத்துவ நிபுணர் அல்லது ஒரு குழந்தை நல மருத்துவரின் ஆலோசனை அவசியப்படும்.

**பாட நேரங்கள்**
பாலர் பாடசாலையின் முதலாம் ஆண்டில் தினசரி முற்பகல் நான்கு பாட நேரங்களில் வகுப்புகள் நடைபெறும். பிற்பகலில் வகுப்புகள் நடைபெற மாட்டாது. முதலாவது பாடசாலை ஆண்டில் பெற்றோர்கள் அவர்கள் குழந்தையின் முதல் பாடநேரத்தைத் தவிர்க்கலாம். பாடசாலை இது குறித்த தகவல்களை அளிக்கும்.

இரண்டாவது பாடசாலை ஆண்டில் தினசரி முற்பகலில் நான்கு வகுப்புகளும் அதேபோல் இரண்டு பிற்பகல்களில் மேலதிகமாக இரண்டு வகுப்புகளும் நடைபெறும்.

பாடசாலை ஆண்டுத் தொடக்கத்திலேயே பெற்றோர்கள் ஆரம்பப் பாடசாலைக்கான கால அட்டவணை மற்றும் மேலதிக முக்கியத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தடங்கலற்ற பாடநேரம்**
காலையில் நடைபெறும் பாடநேரத்தில் வகுப்புகள் தவறாது நடைபெறும். விதி விலக்காக கால அட்டவணையில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது பாடசாலை சம்மந்தமான விசேட நிகழ்வுகள் குறித்து பெற்றோர்கள் உரிய நேரத்தில் அறியத் தரப்படுவர். பாலர் பாடசாலை ஆசிரியர் உடல் நலமற்றிருக்கும் பட்சத்தில் குழந்தைகள் பராமரிக்கப்படுவார்கள் அல்லது பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஆசிரியர் மூலம் வகுப்பு நடாத்தப்படும்.

**சமூகமின்மை, விடுமுறை**
உடல் நலமின்மை அல்லது வேறு முக்கிய காரணங்களினால் குழந்தை சமூகமளிக்க இயலாதிருக்கும் பட்சத்தில் பெற்றோர்கள் சரியான நேரத்திற்குப் பாலர் பாடசாலை ஆசிரியருக்கு அறியத் தருதல் வேண்டும். உங்கள் பிள்ளைகள் சமூகமளிக்க இயலாது என முன் கூட்டியே அறிந்திருக்கும் பட்சத்தில் ஒரு விடுமுறை விண்ணப்பம் அவசியமாகும்.

**இரண்டு அரை நாள் விடுமுறை**
ஒரு பாடசாலை வருடத்தில் இரு அரை நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம். இது குறித்து முன்னதாகவே பாடசாலை ஆசிரியருக்கு அறியத்தருதல் அவசியமாகும்.

**பாடநேரம் தவிர்ந்த நேரத்துக்கான பராமரிப்பு**
தேவை இருக்கும் பட்சத்தில் பாடசாலை மதிய நேரப் பராமரிப்பை வழங்குகிறது. மதிய உணவு வேளையில் உங்கள் குழந்தைகள் பராமரிக்கப் படுவார்கள். மதிய உணவு அளிப்பது குறித்து (விண்ணப்பம், கால நேரம், கட்டணம், பராமரிப்பு, கவனிப்பு) பெற்றோருக்கு முன்கூட்டியே அறியத் தரப்படும்.